# ஆண்டின் பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு

மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

சபை உரையாளர் 1:2,2:21-23, கொலோ. 3:1-5,9-11, லூக்கா: 12:13-21

## திருப்பலி முன்னுரை:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தலைமுறைதோறும் நமது புகலிடமாய் இருக்கின்ற நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்..

“எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது”.என்பது இன்று நமக்குத் தரப்படும் மிக முக்கியமான செய்தியாகும். இச் செய்தி இவ்வுலகில் நமது நிலையாமை பற்றிய உண்மையைப் புரிந்து கொண்டு வாழ அழைக்கின்றது. உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார். என்னும் வார்த்தையும், இவ்வுலகு சாாந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். என்னும் பவுலடியாரின் கூற்றும் எதுவும் நிலையற்றவை ஆனால் இறையன்பு மாத்திரமே நிலையானது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஆகவே உலகப்போக்கிலான பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு. பொய்யை விலக்கி, பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்து புது வாழ்வு வாழ அருள்வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

## முதல் வாசகம்

உழைத்துச் சேர்த்த சொத்தை, அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார்.

**சபை உரையாளர் நூலிலிருந்து வாசகம் 1: 2 2: 21-23**

வீண், முற்றிலும் வீண், என்கிறார் சபையுரையாளர் வீண், முற்றிலும் வீண், எல்லாமே வீண். ஏனெனில், ஞானத்தோடும் அறிவாற்றலோடும் திறமையோடும் ஒருவர் உழைக்கிறார் உழைத்துச் சேர்த்த சொத்தை அதற்காக உழைக்காதவருக்கு விட்டுச் செல்கிறார். அவரது உழைப்பும் வீணே. இது பெரிய அநீதி. உலகில் அவர் செய்த எல்லா முயற்சிக்காகவும், வகுத்த செயல் திட்டங்களுக்காகவும் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? வாழ் நாளெல்லாம் அவருக்குத் துன்பம் வேலையில் தொந்தரவு இரவிலும் அவரது மனத்திற்கு அமைதியில்லை. எல்லாம் வீணே.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்

என் தலைவரே! தலைமுறைதோறும் நீரே எங்கள் புகலிடம்.

**திருப்பாடல் 90: 3-4. 5-6. 12-13. 14,17**

மனிதரைப் புழுதிக்குத் திரும்பிடச் செய்கின்றீர் ஹமானிடரே! மீண்டும் புழுதியாகுங்கள்“ என்கின்றீர். ஏனெனில், ஆயிரம் ஆண்டுகள், உம் பார்வையில் கடந்துபோன நேற்றைய நாள் போலவும் இரவின் ஒரு சாமம் போலவும் உள்ளன. பல்லவி

வெள்ளமென மானிடரை வாரிக்கொண்டு செல்கின்றீர் அவர்கள் வைகறையில் முளைத்தெழும் புல்லுக்கு ஒப்பாவர் அது காலையில் தளிர்த்துப் பூத்துக் குலுங்கும் மாலையில் வாடிக் காய்ந்துபோகும். பல்லவி

எங்கள் வாழ்நாள்களைக் கணிக்க எங்களுக்குக் கற்பியும் அப்பொழுது ஞானமிகு உள்ளத்தைப் பெற்றிடுவோம். ஆண்டவரே, திரும்பி வாரும் எத்துணைக் காலம் இந்நிலை? உம் ஊழியருக்கு இரக்கம் காட்டும். பல்லவி

காலைதோறும் உமது பேரன்பால் எங்களுக்கு நிறைவளியும் அப்பொழுது வாழ்நாளெல்லாம் நாங்கள் களிகூர்ந்து மகிழ்வோம். எம் கடவுளாம் தலைவரின் இன்னருள் எம்மீது தங்குவதாக! நாங்கள் செய்பவற்றில் எங்களுக்கு வெற்றி தாரும்! ஆம், நாங்கள் செய்பவற்றில் வெற்றியருளும்! பல்லவி

## இரண்டாம் வாசகம்

மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள்.

**திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 3: 1-5,9-11**

சகோதரர் சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்து விட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள். ஆகவே உலகப் போக்கிலான உங்கள் இயல்புக்குரிய பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலை வழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிடுங்கள். ஒருவரோடு ஒருவர் பொய் பேசாதீர்கள். ஏனெனில் நீங்கள் பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள். அவ்வியல்பு தன்னை உண்டாக்கினவரின் சாயலுக்கேற்பப் புதுப்பிக்கப்படுகிறது. இவ்வாறு நீங்கள் கடவுளை முழுமையாய் அறிய முடியும். புதுப்பிக்கப்பட்ட நிலையில் கிரேக்கர் என்றும், யூதர் என்றும், விருத்தசேதனம் பெற்றவர் என்றும், விருத்தசேதனம் பெறாதவர் என்றும், நாகரிகம் அற்றோர் என்றும், சீத்தியர் என்றும், அடிமை என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்துவே அனைவருள்ளும் அனைத்துமாய் இருப்பார்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு

- இறைவா உமக்கு நன்றி

## நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா ! ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது அல்லேலூயா !

## நற்செய்தி வாசகம்

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 12: 13-21

அக்காலத்தில் கூட்டத்தில் இருந்த ஒருவர் இயேசுவிடம், போதகரே, சொத்தை என்னோடு பங்கிட்டுக் கொள்ளுமாறு என் சகோதரருக்குச் சொல்லும்" என்றார். அவர் அந்த ஆளை நோக்கி, என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?" என்று கேட்டார். பின்பு அவர் அவர்களை நோக்கி, எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாய் இருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது" என்றார். அவர்களுக்கு அவர் ஓர் உவமையைச் சொன்னார்: செல்வனாய் இருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அவன், நான் என்ன செய்வேன்? என் விளைபொருள்களைச் சேர்த்து வைக்க இடமில்லையே!" என்று எண்ணினான். ஒன்று செய்வேன் என் களஞ்சியங்களை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் அங்கு என் தானியத்தையும் பொருள்களையும் சேர்த்து வைப்பேன்". பின்பு, என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பலவகைப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன் நீ ஓய்வெடு உண்டு குடித்து, மகிழ்ச்சியில் திளைத்திடு" எனச் சொல்வேன் என்று தனக்குள் கூறிக்கொண்டான். ஆனால் கடவுள் அவனிடம், அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" என்று கேட்டார். கடவுள் முன்னிலையில் செல்வம் இல்லாதவராய்த் தமக்காகவே செல்வம் சேர்ப்பவர் இத்தகையோரே."

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1.ஞானமிகு உள்ளத்தை வளங்கிடும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும், உமது சாயலுக்கேற்பத் தங்களைப் புதுப்பித்துக்கொண்டு. இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றிய ஆர்வமுடையவர்களாகவும், அதன்மூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிடும் மனப்பக்குவத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. தலைமுறைதோறும் எமது புகலிடமாய் இருக்கின்ற தந்தையே இறைவா!**

நாம் உலகப்போக்கிலான பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு. பொய்யை விலக்கி, பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்து புது வாழ்வு வாழ உதவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இம்மண்ணிலே புலம் பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. உமது பேரன்பால் எங்களுக்கு நிறைவளிக்கும் தந்தையே இறைவா!**

பல்வேறு விதமான நோய்களாலும் தாக்கப்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருப்போர் அனைவரையும் உமது கருணையால் குணப்படுத்தி, உமது பேரன்பால் அவர்களை நிறைவு படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

எமது பிள்ளைகளை உமக்குக் காணிக்கையாக்குகின்றோம். அவர்கள் உமது வார்த்தையை ஆர்வமுடன் கேட்டு உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# இன்றைய சிந்தனை

பணம் எதற்காக ....

உயிர் இல்லாத அழகு வீண். சாதனை இல்லாத அறிவு வீண். பணிவு இல்லாத வீரம் வீண். தர்மம் இல்லாத செல்வம் வீண். ஆன்மீகம் இல்லாத வாழ்க்கை வீண்.

சபை மக்களின் வாழ்க்கை எப்படி உள்ளது? ஆன்மீகம் குறைந்தவர்களின் வாழ்க்கை நன்றாக இல்லை. ஆன்மீகம் நிறைந்தவர்களின் வாழ்க்கை மிகச் சிறப்பாக உள்ளது.

ஆன்மீகக் குறைவுக்குக் காரணம் என்ன? அத்தகையோர் பணம் சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஆன்மீகம், ஆண்டவன், கோயில், வழிபாடு இல்லாதவர்கள்.

பணம் சம்பாதிக்க வேண்டும். பணத்தைச் சேமிக்க வேண்டும் என்பதெல்லாம் தவறில்லை. சரிதான். எதற்காக சம்பாதிக்க வேண்டும்? எதற்காக சேமிக்க வேண்டும் என்பதில்தான் சிக்கல்.

தேவைக்கு அதிகம் வைத்திருப்பவன் திருடன், கொள்ளைக்காரன். சம்பாதித்த பணத்தில் தேவைக்கு அதிகமானதை ஏழை எளியோருக்காக தான தர்மம் செய்யும்போது கடவுள் முன்னிலையில் செல்வம் சேர்க்கிறோம். அந்த செல்வம் வாழ்வைத் தரும்.

தன்னைத் தாண்டி செல்வந்தனால் சிந்திக்க முடியவில்லை. என்னதான் நான் உழைத்தாலும், பணம் கடவுள் தந்தது. அதை அவருக்கே திரும்ப கொடுக்க வேண்டும். அயலானுக்குக் கொடுக்கும்போது ஆண்டவனுக்கே கொடுக்கிறேன் என்ற சிந்தனை வேண்டும்.

கல்லுக்கள் வாழும் தேரைக்கும் உணவுட்டும் இறைவன், தன் கண்ணுக்குள் வைத்திருக்கும் உன்னைப் புறக்கணிப்பாரோ!

**மன்றாட்டு:**

இறைவா, உமது விருப்பப்படி வாழ்ந்து வாழ்க்கையை எக்காலத்தும் வாழ எங்களை மாற்றியருளும்.